**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 132/2015 |
| Deposition of witness | | PW - 5 /ADW |
| Name | | திரு.ராமசாமி |
| Father's/Husband Name | | திரு.ரெங்கசாமி |
| Village | | வடக்குக்தெரு, தளிகைவிடுதி |
| Taluk | | திருவோனம் |
| Age | | 59/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 3rd day Marchof 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது பட்டுக்கோட்டை தாலுக்கா காவல்நிலையத்தில் (கூடுதல் பொறுப்பு) உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் முதல் தகவலரிக்கை பதிவு செய்த புலன்விசாரனை அதிகாரியான முத்துலஷ்மி பணி மாறுதல் காரணமாகவும் அவருடன் பணிபுரிந்ததால் அவரது கையெழுத்து நன்கு பரிட்சயம் என்பதாலும், ப.சா.1 பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளதாளும் மேலும் எதிரிகளுடன் சமாதானம் செய்துகொண்டதாளும் நீதிமன்றத்தில் நேரத்தையும் மற்றும் நலனைக் கருத்திற்கொண்டு இவ்வழக்கின் ஆவண்ங்கள் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

இதற்கு முன்பு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த முத்துலஷ்மி இருந்தபோது வசந்தா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.252/2013 ச/பி 324,506(2) இ.த.ச பிரிவுகளின் படி 17.09.2013ம் தேதி 22.00 மணிக்கு வழக்கு பதிவு செய்துள்ளார். அவர் பெற்ற புகார் மனு **அசாஆ 3** ஆகும். அவர் பதிந்த முதல் அச்சு தகவல் அறிக்கை **அசாஆ 4** ஆகும். பின்பு வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு கடந்த 18.09.2013 காலை 06.00 மணிக்கு சம்பவ இடம் சென்று

சாட்சிகள் எழிலரசன், வெற்றிவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகசர் **அசாஆ** 5 மற்றும் மாதிரிவரைப்படம் **அசாஆ** 6 ஆகும். பின்பு பார்வை மகசர் சாட்சிகள் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு சம்பவ சாட்சிகள் வசந்தா, சேகர், சைராஜ், அருள், ஜெயசீலன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி சாட்சிகள் சம்பவத்தைப்பற்றி தெளிவாகவும் விளக்கமாகவும் அவர் வாக்குமூலத்தில் உள்ளபடி கூறினார்கள். மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும், புலன் விசாரணையிலிருந்தும், வழக்கு சம்பவம் உண்மை என்பது தெரிய வந்ததால் எதிரிகளை கைது செய்ய தேடியபோது கடந்த 18.09.2013 10.00 மணிக்கு உதயசூரியபுரம் பேருந்து நிறுத்தம் அருகில் நின்றிருந்தவர்களை தக்க காரணம் கூறி கைது செய்து நிலையம் வந்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்பு காயம்பட்ட அசா1க்கு சிகிச்சை அளித்த பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனை மருத்துவர் தேவமணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றுள்ளார். மேற்படி கடந்த 05.11.2013 மருத்துவர் தேவமணி பணியில் இருந்தபோது காயம்பட்ட சேகர் என்பவரை காயத்துடன் சிகிச்சைக்கு வந்தவரை பரிசோதனை செய்து விபத்துப்பதிவேடு பதிவு செய்து முதல் சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார். அவர் மேல் சிகிச்சைக்கு சேரவில்லை என்பதால் சிகிச்சைக்கு பின் காயம் பட்ட நபருக்கு could not be given என்று சான்று வழங்கியுள்ளார் அந்த விபத்து பதிவேட்டு நகலுடன் கூடிய காயச்சான்றிதழ் **அசாஆ** 7 ஆகும். கடந்த 05.11.2013 இந்த வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது 324,506(2) இதசவிலிருந்து 324, 342 ச/பி மாற்றி ச/பி மாறுதல் அறிக்கையுடன் குற்ற இறுதி அறிக்கை தாக்கல்

செய்துள்ளார். சட்டப்பிரிவு மாற்றுதல் அறிக்கை **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**வாதியிடம் தவறான தகவலை பெற்று பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஓம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை